[1993 ஏப்ரல் 29

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பகுதியிலே ஏற்கனவே 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு தேவையான இடங்களில் - அதாவது ஆலத் தம்பாடி ரெகுலேட்டரின் கீழ்ப்பகுதி என்று சொல்லியிருக்கிறார் கள் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில் - ஏராளமான புல்டோசர்களை வைத்து, சென்ற ஆண்டு - திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தைவிட 2 மடங்கு தூரங்களை அந்தக் கால்வாய்ப் பகுதியிலே சீரமைத்தோம். என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பார்த்து இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்க ளுடைய பகுதியிலே 15 கிலோ மீட்டர் அளவிலே இந்தச் செடிகள் மண்டியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டும், அதைப்போல, இந்தப் பணிகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, ஆண்டுக்காண்டு, இப் படிப்பட்ட பணிகளை இந்த அரசு மிக வேகமாக, மிக துரிதமாக செய்து கொண்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆகவே, இந்த ஆண்டு, அவருடைய-பகுதியிலே அவர்கள் தெரிவித்திருக்கின்ற பகுதியிலே நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ளும் என்பதையும், இதுபற்றி உடனடியாக அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. அறிக்கைகள் அளித்தல்.

(அ) மதிப்பீட்டுக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல் திரு. கி. தருமலிங்கம், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக கீழ்க்கண்ட அறிக்கை களை பேரவைக்கு அளிக்கிறேன்.

1. 12–வது அறிக்கை—மாவட்ட நிர்வாகம் மற்றும்
2. 13-வது அறிக்கை—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்.

போதிய கால அவகாசம் இல்லாததால், மேற்கண்ட அறிக் கைகளை அச்சிட்டு அளிக்க இயலவில்லை. படி எடுத்த நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக இப்பேரவையின் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.